திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் காலங்களில் மின் பற்றாக்குறையின் நிலையினைக் கருத்திலே கொண்டு, அங்கே புதியதாக ஒரு மின்மாற்றியை அமைத்துத் தர ஆவன செய்யப்படும் என்பதை பேரவையில் அறிவித்த, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நான் வணங்குகிற இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இடம் அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 396, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

396—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***15903—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஊராட்சி, 1–வது வார்டு, பெரியார் நகரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விராலிமலை ஊராட்சி, 1–வது வார்டு, பெரியார் நகர் 2006 மறு ஆய்வின்படி தனிக்குடியிருப்பாக இல்லை. இது விராலிமலை குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இப்பகுதிக்கு, இவ்வூராட்சியைச் சேர்ந்த மணமேட்டுப்பட்டி குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்

2013 மே 6]

தொட்டியிலிருந்து குழாய் விஸ்தரிப்பின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவே உற்றுநோக்குகின்ற அளவிற்கு, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமாக, கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டும் என்ற மிகப் பெரிய தீர்மானத்தை நிறைவேற்றி, பெருமை சேர்த்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதியிலே, விராலிமலை ஊராட்சி என்பது ஒரு பேரூராட்சிக்கு இணையான ஒரு ஊராட்சியாகும். இன்றைய அளவிலே சுமார் 11,000–க்கும் மேற்பட்ட மக்கள்தொகை இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலுள்ள பெரியார் நகரில் மட்டும் சுமார் 500–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆகையால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும் என்ற அந்த மக்களின் கோரிக்கையை அவையில் வைத்தேன்.

குழாய் மூலமாக குடிநீர் வழங்கப்படும் என்ற சாதகமான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தாலும், வருங்காலங்களில் அந்தப் பகுதி மக்கள்தொகையின் தேவைக்கேற்ப, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்ட மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, ஊராட்சிப் பகுதிக்கும், பேரூராட்சிக்கும் உள்ள வித்தியாசம், பேரூராட்சிகளில் வீடுகள் நெருக்கமாக இருக்கும், அங்கே இருக்கின்ற வார்டு அமைப்புகள் நெருக்கமாக இருக்கின்ற

காரணத்தால், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டினால் ஐந்து அல்லது ஆறு வார்டுகள் பயன்பெறச் செய்யலாம். இது ஊராட்சியாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நியாயமான கோரிக்கை. அதன் அடிப்படையிலே, அந்தப் பகுதியில் உள்ள இந்த வார்டு, எந்தெந்த கிராமங்களை உள்ளடக்கியது என்பதை ஆய்வு செய்து, இந்த நீர் அனைத்துக் கிராமங்களையும் சென்றடைகிறதா என்பதையும் ஆய்வு செய்து, அவ்வாறு நிறைவாகச் சென்றடையவில்லை என்று சொன்னால், தேவைப்படின் புதிதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட மக்கள் பெரிதும் மகிழ்ச்சியோடும், நன்றியோடும் எதிர்பார்த்திருக்கக்கூடிய, இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, இந்த நல்லாட்சியிலே அறிவிக்கப்பட்ட, நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தில், விராலிமலை சட்டமன்றத் தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் காவேரி குடிதண்ணீர் வழங்குகின்ற அற்புதமான குடிதண்ணீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இந்த நேரத்திலே கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விரிவாக இதற்குப் பதில் கூறியுள்ளேன். மீண்டும் ஒரு முறை மாமன்ற உறுப்பினருக்காக இந்தக் கருத்தைச் சொல்ல விழைகின்றேன்.

2013 மே 6]

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழகத்திலே இருக்கின்ற ஊராட்சிப் பகுதிகளில், வறட்சி மிகுந்த பகுதிகளில் அனைவருக்கும் தேவையான குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்பதற்காக 2011–2012 ஆம் நிதியாண்டிலேயே 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிவித்தார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேற்ற ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

முற்பகல் 10–10

2011–2012–ல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அந்தத் திட்டங்கள், 2012–2013–ல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்த நிதியாண்டில் அந்தப் பணிகள் அத்தனைக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தத் திட்டத்தைப்பற்றி இங்கே விளக்கமாகச் சொல்ல விழைகின்றேன்.

திட்டம்–1: காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, திருச்சி மாவட்டம், திருப்பராய்துறை கிராமம் அருகில் தலைமைப் பணியிடமாகக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலை பகுதி, அன்னவாசல் பகுதி, பொன்னமராவதி, குன்றாண்டார்கோவில் பகுதி, திருமயம், அரிமளம் மற்றும் புதுக்கோட்டை பகுதி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,766 குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள எஸ்.புதூர் மற்றும் சாக்கோட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 125 குடியிருப்புகள், ஆக மொத்தம் 1,891 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்தத் திட்டம்.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை எண் 2, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10–1–2013–ன்மூலம், ரூபாய் 301.50 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின், திட்டப் பணிகள் தொடங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டிற்கு வருகின்றபோது, சுமார் 5,54,348 மக்கள் பயன் பெறுவர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டம்—2: தஞ்சாவூர் மாவட்டம், திருச்சனாம்பூண்டி கிராமம் அருகில் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலை பகுதி, அன்னவாசல் பகுதி, குன்றாண்டார்கோவில் பகுதி, புதுக்கோட்டை பகுதி, அறந்தாங்கி, திருவரங்குளம், கறம்பக்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,751 குடியிருப்புகள் மற்றும் வல்லம் பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்தத் திட்டம்.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை எண் 11, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28–1–2013–ன் மூலம், ரூபாய் 315.70 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, தற்போது வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின், இந்தத் திட்டப் பணிகள் தொடங்கப்படும். இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது, 6.40 இலட்சம் மக்கள் பயன்பெறுவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த 23 மாத காலத்தில், இந்தத் துறையின் சார்பாக கிட்டத்தட்ட 1,000 எம்.எல்.டி. அளவிற்கு தமிழ்நாட்டிலே வாழ்கின்ற அனைவருக்கும் குடிநீர் வழங்குவதற்குரிய திட்டங்களை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், அவற்றிற்கான நிதியாதாரங்களையும் கொண்டு வந்து, உடனடியாக செயல்பாட்டிற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் இன்னும் 30 மாத காலத்தில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்கு மட்டுமல்ல; மாவட்டம் முழுமைக்கும் நிறைவாகத் தண்ணீர் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

2013 மே 6]

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்திய நாடு முழுவதும் 60 ஆயிரம் கோடி ரூபாய்க்குத் தண்ணீர் விற்பனை ஆகியிருக்கிறது என்ற செய்தி வெளிவந்திருக்கிறது. தண்ணீரைத் தனியாருக்குக் கொடுப்பதற்கு தேசிய நீர்க் கொள்கைச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்ததை நமது தமிழக அரசின் சார்பில் நாம் கடுமையாக எதிர்த்திருக்கிறோம். விவசாயிகளுக்கான பாசனம் உள்பட, அவர்கள் பட்டா நிலத்தில் இருக்கக்கூடிய தண்ணீரைக்கூட விலை கொடுத்து வாங்க வேண்டுமென்று குஜராத் மாநில அரசு சட்டம் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி அமைப்புகள் மூலமாகவே, பல குடிநீர்த் திட்டங்களைத் தமிழக அரசு ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. சென்ற தேர்தலில், '20 லிட்டர் நல்ல குடிநீரை, சுத்தமான குடிநீரை, நாங்கள் வழங்குவோம்' என்ற வாக்குறுதி அனேகமாக எல்லா வாக்காளர்களுடைய இதயத்தையும் தொட்டது. இந்த வாக்குறுதியை எப்போது நிறைவேற்றுவதற்கு தாங்கள் முன்வருவீர்கள்? அதை அரசினுடைய பரிசீலனைக்குக் கொண்டு செல்வீர்களா என்பது குறித்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், '20 லிட்டர் நல்ல குடிதண்ணீர் அனைத்து மக்களையும் சென்றடையும்' என்று தேர்தல் நேரத்தில் சொன்னது, அனைவரின் இதயத்தையும் தொட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தனி மின்விசைக் குடிநீர்த் திட்டங்கள், அதோடு மட்டுமல்லாமல், கடல் நீரை நன்னீராக்குகின்ற திட்டங்களின் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அனைத்து மக்களுடைய இதயங்களைத் தொடுகின்ற அளவிற்குக் குடிதண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 397, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*